தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி.

*வினா 266—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித்துறை ஏற்படுத்த அரசால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித்துறை என்ற பெயரில் இல்லாமல் அரபு-பார்சிய-உருதுத் துறை ஒன்று இயங்கி வருகிறது. அது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் சுமார் ரூ. 40,000 அந்தத் துறைக்கு ஒதுக்கி வருகிறது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சியில் எந்த எந்தப் பகுதிகளை தேர்ந்தெடுத்து ஆராய்ந்துக் கொண்டிருக்கிறார்கள்? இது குறித்த விவரத்தைப் பல்கலைக் கழகம் புத்தகமாக வெளியிடுவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரபு-பார்சிய-உருது ஆகியவை அடங்கிய ஒரு துறை 1930ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. பல்வேறு ஆராய்ச்சி நூல்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமியர்களுடைய பழக்க வழக்கங்கள், தமிழகத்தில் அது எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பது பற்றியும், இன்னும் அது தொடர்புடைய பல்வேறு பணிகள் பற்றியும் நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. உமறுப் புலவர் எழுதிய "சீறுப் புராணம்" என்னும் நூலை பல்வேறு நூலாசிரியர்களுடைய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் வெளியிட்டிருக்கிறார்கள். டாக்டர் முகம்மது உசேன் நயினார் என்பவர் ஐந்து நூல்களை ஆராய்ச்சிகள் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள். முகமது முனவர்கான் பகதூர் பக்கீர் கவாகர் என்பவர் ஒரு புத்தகத்தை

உருதுவில் வெளியிட்டிருக்கிறார். மௌலானா முகம்மது உசேன் மாவி என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். முகம்மது யூசுப் கான் என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஜனாப் உஷா என்பவர் நான்கு நூல்களையும், ஜனாப் யூசுப் கோக்கன் என்பவர் ஆறு நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இஸ்லாமிய இலக்கியத்தில் மிகச் சிறப்புக்குரிய இலக்கிய நூல்கள் இன்னும் பலரிடத்தில் இருக்கின்றன. அவற்றை நம்முடைய அரசு பெற்றுவெளியிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறையே அவற்றைக் கவனிக்கலாம். சிறந்த தமிழ் நூல்களாக இருந்தால் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் பெறலாம். சிறந்த, முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்களை வெளியிடுவதற்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக ஓரளவு உதவி தருகிறார்கள். அந்த உதவி அடிப்படையில் செய்யலாம். அதற்குரியவர்கள் அரசை அந்த முறையில் அணுக வேண்டும்.

Nattalam High School

* 267 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal under the consideration of the Government to upgrade the post of Headmaster of Nattalam Government High School, Kanyakumari district into a Gazetted one?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, நட்டலம் பள்ளிக் கூடத்தை அரசிதழ் பதவி உயர்வு பெற்ற தலைமையாசிரியரைக் கொண்ட பள்ளிக்கூடமாக மாற்றுவதற்கு வேண்டிய எண்ணிக்கை அங்கு இருக்கிறது அதை அரசிதழ் பதிவு தலைமையாசிரியரைக் கொண்ட உயர்நிலைப்பள்ளியாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியரை நியமிக்க வேண்டுமென்றால் அந்தப் பள்ளியில் குறைந்தது ஆயிரம் மாணவர்களாவது இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், இந்தக் குறிப்பிட்ட பள்ளியில் 514 பேர் தான் இருக்கிறார்கள், என்ற காரணத்தால் அந்தப் பள்ளியை ஒரு அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நியமிக்கின்ற பள்ளியாகக் கருதுவதற்கில்லை.